## கன்னியாகுமரி மாவட்ட தேவஸ்வம் போர்டு ஊழியர்கள்.

* 147 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வணிக வரி மற்றும் அறநிலையத் துறையின் 15—10—1979 ஆம் நாளிட்ட அரசு ஆணை நிலை எண். 1645-ல் கன்னியாகுமரி மாவட்ட தேவஸ்வம் போர்டின் ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு ஒப்ப ஓய்வூதியமும், குடும்ப நல சலுகைகளும் 1—4—1979 முதல் உண்டு என ஆணைகள் அறிவிக்கப்பட்ட பிறகு, 1—4—1979-க்கு முன்னர் ஓய்வு பெற்ற அதிகாரிகளிடமிருந்து, தங்களுக்கு அரசு ஆணையின் பயனை நீட்டித்துத்தர வேண்டுமென்று, முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

(உ) பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: (அ) ஆம்.

(இ) & (உ) இம்முறையீட்டினை அரசு ஆராய்ந்து 1—4—79-க்கு முன்னும் ஆனால் 1—1—75-க்குப் பின்னும் ஓய்வு பெற்ற 10 ஊழியர்களுக்கும் தமிழ்நாடு தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள் 1960-ன் கீழ் ஓய்வு ஊதியமும் குடும்ப ஓய்வூதியமும் பெறும் வகையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## தொலைக்காட்சி நிலையங்கள்.

* 148 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொலைக்காட்சி ரிலே நிலையங்கள் தமிழ்நாட்டில் எந்த இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன?

(இ) திருச்சி, கோவை, மதுரை, நெல்லை ஆகிய இடங்களில் டெலிவிஷன் நிலையங்கள் கட்ட, மாநில அரசு மத்திய அரசிடம் முயற்சி செய்து வருகிறதா?